சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். 75/2021

**PW 2 அர்ஜுனன்** **23.10.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னை நீதிமன்றத்திற்கு யார் அழைத்து வந்தது என கேட்டால் வாதி தான் அழைத்து வந்தார். வாதி என்னை சாட்சியம் அளிக்க கூட்டி வந்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கை எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் நீதிமன்றத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். பிரமாண பத்திரிக்கையில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், தற்போது அந்த விவரங்கள் ஞாபகமில்லை. என்னை புரோநோட் எழுத யார் அழைத்து சென்றது என கேட்டால் முருகானந்தம் அழைத்து சென்றார். யார் புரோநோட்டை எழுதியது என கேட்டால் முருகானந்தத்தின் சகோதரர் முரளிக்குமார் எழுதினார். சாட்சி கையெழுத்து போடும் போது புரோநோட்டில் அடித்தல் திருத்தல் இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு சரியாக ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் புரோநோட்டில் எழுத வேண்டிய இடத்தில் எழுதாமல் கீழே அடித்து எழுதுவதற்கு என்ன காரணம் என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. புரோநோட் எழுதுவதற்கு தேவையான பொருட்கள் யார் வாங்கி வந்தார்கள் என கேட்டால் முருகானந்தம் வாங்கி வந்தார். பிராம்சரி நோட்டை எழுதும் போது முருகானந்தம், ராஜமாணிக்கம் அவரது மனைவி மற்றும் நான் ஆகிய 4 பேர் இருந்தோம். புரோநோட்டை எழுதியதும் மற்றும் கையெழுத்திட்டதும் ஒரே

பேனாவால் எழுதப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புரோநோட்டில் நான் கையெழுத்திட்ட மையிற்கும் இதர எழுத்துக்களில் கண்ட மையிற்கும் வேறுபாடு உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் ராஜமாணிக்கத்தோடு காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் சென்றதில்லை. புரோநோட் தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், யாரோ தயார் செய்த பிரமாண வாக்குமூலத்தில் நான் கையெழுத்திட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி